**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அவர்களின் செயல்முறைகள்**

ந.க.எண்.2188/ஆ5/2024 நாள்:22.10.2024

பொருள் : தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து J-PAL South Asia நடத்தும் "**Identifying and Nurturing Math Talent at Scale**" ஆய்வை செயல்படுத்துவது தொடர்பாக

பார்வை :
1. அரசாணை நிலை எண். 81, திட்டமிடல் மற்றும் மேம்பாடு (P&D) துறை நாள்: 19.11.2014
2. அரசாணை நிலை எண். 167, திட்டமிடல் மற்றும் மேம்பாடு (P&D) துறை நாள்: 30.11.2023

---

பார்வை 1-ல் காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, "J-PAL தெற்காசியா", ஆதாரங்களின் அடிப்படையில் அரசுத் திட்டங்களை முன்னெடுக்கும் முயற்சியில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து பங்காற்றுகிறது. இதன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து, J-PAL "Identifying and Nurturing Math Talent at Scale" என்ற தலைப்பில் ஒரு ஆய்வை மேற்கொண்டு வருகிறது.

இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், கணிதத்தில் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு Art of Problem Solving (AoPS) என்ற ஒரு ஆன்லைன் தளத்தில் கணிதப் பாடங்கள் வழங்குவதும், அது அவர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்வதுமே ஆகும். இந்த ஆன்லைன் வகுப்பை பயன்படுத்தும் போது மாணவர்கள் உலகத்தரம் வாய்ந்த கற்றல் முறைகளை இலவசமாகவும், தங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பைப் பெற முடியும். மேலும் கணித பாடத்தை எளிமையான முறையில் கற்றுக்கொள்ளவும் உதவும்.

பட்டியலில் கொடுக்கப்பட்ட மாணவர்களுக்கு J-PAL களக் குழுவினர் மூலம் பாடப்புத்தகம் மற்றும் ஆன்லைன் தளம் வழங்கப்படும் .

**மாணவர்களுக்கு:**

- தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஒரு மாத காலத்திற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட செய்முறை தாளில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையை புத்தகதாளில் நிரப்ப வேண்டும். மற்றும் ஆன்லைன் தளத்தில் கலந்து கொண்டு வினாடி வினாக்களின் பதில்களை உள்ளிட்டு சமர்பிக்க வேண்டும் .

**தலைமை ஆசிரியர்களுக்கு:**

- கணித ஆசிரியர் மாணவர்களை ஊக்குவித்து மாணவர்கள் கலந்து கொள்வதை உறுதிபடுத்திகொள்ளவும்.
- மாணவர்கள் தங்களின் புத்தக பக்கங்களை வாரத்திற்கு ஒருமுறை பதிவேற்றுவதற்காக ஆசிரியருக்கு குறிப்பாக ஒரு டேப்லெட் வழங்கப்படும். மாணவர்கள் அவர்களின் பதில்களை சமர்ப்பிக்க உதவி தேவையெனில், கணித ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

- மாணவர்களை ஆதரிப்பதற்காக ஆசிரியர்களுக்காக நாங்கள் குறிப்பாக டேப்லெட்டை வழங்குகிறோம். உங்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு, வாரத்திற்கு ஒருமுறை அவர்களின் சிறு புத்தகங்களைப் பதிவேற்ற உதவும்.
- 4 –ஆம் வார முடிவில் மாணவர்கள் ஆன்லைன் தேர்வில் கலந்து கொள்ளவேண்டும்.
- பள்ளியில் Hi–Tech Computer Lab வசதி இருப்பின் மாணவர்கள் கணினி மூலம் ஆன்லைன் தேர்வில் கலந்து கொள்ள அனுமதி வழங்கவும்.
- களக்குழுவினர் இவர்களை தொடர்ந்து கண்காணிக்க பள்ளிக்கு வருகை புரிவார்கள்.

இந்த திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட தலைமை ஆசிரியர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு:
தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின்
பெயர்ப்பட்டியல்

பெறுநர்:
சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.